# பேச்சுப் போட்டியில் வாய்மொழித் தொடர்பாடல் பகுதி

## எட்டாம் வகுப்பு - மாதிரி வினாக்கள்

கேள்விகள் பேச்சு வழக்கில் கேட்கப்படும். உ+ம்: “உங்கட பேர் என்ன?”. மாணவர்கள் கேள்வியை விளங்கிக் கொள்ளாதவிடத்து, ஒத்த சொற்களைப் பயன்படுத்தியோ அல்லது எழுத்து வழக்கிலோ கேள்விகள் கோட்கப்படும். உ+ம்: கூறுங்கள் = சொல்லுங்கள் / மிருகம் = விலங்கு.

1. வணக்கம். உங்கள் பெயர் என்ன?
   எந்தப் பாடசாலையில் படிக்கின்றீர்கள்?

2. எதிர் காலத்தில் நீங்கள் என்ன செய்ய (எவ்வாறு வர) விரும்புகின்றீர்கள்? (உங்கள் இலட்சியம் என்ன?)

3. நீங்கள் தமிழ்த் திரைப்படங்கள் பார்ப்பதுண்டா?
   நீங்கள் பார்த்த படங்களில் உங்களுக்கு பிடித்தமான திரைப்படம் பற்றிச் சொல்லுங்கள்?

4. தமிழ் ஊடகங்கள் பற்றிக் கூறுங்கள்? (பத்திரிகைகள் / வானொலிகள் / தொலைக்காட்சிகள் / இணையத் தளங்கள்).

5. அவுஸ்திரேலியாவின் சிறப்புக்கள் பற்றிக் கூறுங்கள்? (கல்வி / பொருளாதாரம் / பல்லினக் கலாசாரம் / இயற்கை அழகு / வாழ்க்கை முறை).

6. தமிழ்ப் பாடசாலையை எவ்வாறு இன்னும் சிறப்பாக நடாத்தலாம் என்று நீங்கள் கருதுகின்றீர்கள்? (கற்றல் / கற்பித்தல் / நிர்வாகம் / மாணவர்களின் எதிர்பார்ப்பும் பங்களிப்பும்)

7. வேறு ஏதாவது நீங்கள் எங்களுக்குச் சொல்ல விரும்புகின்றீர்களா? அதைக் (அவற்றைக்) கூறுங்கள்?

நன்றி.